[1990 மே 2

கோவளத்தில் மீன்பிடித்துறை அமைத்தல்.

*8149. டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவளத்தில் மீன்பிடித்துறை அமைக்கும் செயற் குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) சொந்த கட்டுமரம் இல்லாமல் அவதிப்படும் மீனவர் களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த இந்த மீன்பிடித்துறை உடனடி யாக அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, கிட்டத்தட்ட 80 கிலோ மீட்டர் விஸ்தீரணத்தில், எந்தவித மீன்பிடித் துறைமுகமும் இல்லாத காரணத்தினாலும், அப்படி மீன் பிடிப்பது இராயபுரத்திலிருந்து சென்னை நகர் வழியாக வருவதாலும், அப்பொருள்கள் சேதம் அடைவதாலும், உடனடியாக மீன் பிடிப்பவர்களுடைய நலனைக் கருத்திற் கொண்டு, அவ்விடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவளத்தில் மீன்பிடித் துறைமுகமோ, தங்குதள வசதிகளோ ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தொழில் நுட்ப ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை என்ற கருத்தினை பெங்களூர் மத்திய கடலோர பொறியியல் மையத்தினைச் சேர்ந் தவர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கின்றார்கள். பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் 240 கிலோ மீட்டர் தொலைவிலும், நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் 120 கிலோ மீட்டர் இடைவெளியிலும், சிறிய மீன்பிடித் துறைமுகம் 30 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைக்கப்பட வேண்டும் என்பதே தொழில் நுட்ப ரீதியான கருத்து. அதோடு, கோவளத்தில் கடல் பகுதி திறந்து இருப்ப தாகவும், வளைகுடா இல்லாததாலும் அங்கு தங்குதளம் அமைப் பதற்கான தொழில் நுட்ப ரீதியான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.